பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 123

02.11.2026

கடந்த 01.10.2026 முதல் 31.10.2026 வரை தமிழகத்தில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையால் 18 பொறிவைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அலுவல் ரீதியான பணிகளைச் செய்வதற்காக ரூ.1,000/- முதல் ரூ.5,00,000/- வரை லஞ்சம் கேட்டு பெற்ற அரசு ஊழியர்கள் (வணிக ஆய்வாளர், கிராம நிர்வாக அதிகாரி, கிராம உதவியாளர், மாவட்ட சுகாதார அலுவலர், வருவாய் ஆய்வாளர், பில் கலெக்டர், கூடுதல் மாவட்ட தீயணைப்பு அலுவலர், இளநிலை பொறியாளர், சிறப்புத்தர போர்மேன்) ஆகியோர்கள் கைது செய்யப்பட்டனர்.

மேலும் தமிழகம் முழுவதும் உள்ள அரசு அலுவலகங்களில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஆய்வு குழு அலுவலர்களுடன் இணைந்து பல்வேறு அரசு அலுவலகங்களில் திடீர் சோதனை நடத்தப்பட்டு சம்பந்தப்பட்ட அலுவலகங்களிலிருந்து கணக்கில் வராத ரொக்கம் ரூ.8,21,750/- கைப்பற்றப்பட்டது மற்றும் G Pay ரூ.1,50,96,281/- கண்டறியப்பட்டது ஆக மொத்தம் ரூ.1,59,18,031/-. அரசு ராஜா மிராசுதாரர் மருத்துவமனையில் பணிபுரியும் ஒப்பந்தபணியாளர்களிடமிருந்து நடத்தப்பட்ட திடீர் சோதனையில் கணக்கில் வராத ரொக்கம் ரூ.20,040/- கைப்பற்றப்பட்டது. இதன் தொடர்ச்சியாக வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஊழல் வழக்கில் 4 வழக்குகள் சேலம் ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம் மற்றும் கிருஷ்ணகிரி, காஞ்சிபுரம் மற்றும் வேலூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றங்களால் அப்போதைய இணை சார்பதிவாளர், உதவியாளர், கிராம நிர்வாக அதிகாரி மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோர்களுக்கு 2 ஆண்டுகள் முதல் 4 ஆண்டுகள் வரை கடுங்காவல் சிறைத் தண்டனையும் ரூ.4,000/- முதல் ரூ.10,000/- அபராதமும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

PRESS RELEASE – 123
02.11.2026

Between 1st October 2026 and 31st October 2026, the Directorate of Vigilance and Anti-Corruption (DVAC) laid 18 traps across state on government officials (Commercial Inspector, Village Administrative Officer, Village Assistant, District Health Officer, Revenue Inspector, Bill Collector, Addl. District Fire Officer, Junior Engineer, special Grade Foreman) who demanded and accepted bribes ranging from Rs.1,000/- to Rs.5,00,000/- for performing official duties and were arrested.

During the above period, DVAC officials, along with District Inspection Cell officers, conducted surprise checks at various government offices located all over Tamil Nadu. The operation led to the seizure of Rs.8,21,750/- in unaccounted cash and Rs.1,50,96,281/- in suspicious financial transactions through G-Pay, bringing the total amount to Rs.1,59,18,031/- Additionally, during surprise check at Government Raja Mirasuthar Hospital, Thanjavur district an unaccounted money of Rs.20,040/- seized. Cases were registered, and investigations are underway.

During the above period Special Court for Prevention of Corruption Act cases, Salem, as well as the Principal and Sessions Courts in Krishnagiri, Kanchipuram and Vellore, convicted Joint Sub Registrar, Assistant, Village Administrative Officer and Block Development Officer. The courts sentenced them to rigorous imprisonment ranging from two to four years, along with fines ranging from Rs.4,000/- to Rs.10,000/-

---